**வடக்கு மாகாணப் பாடசாலைகளில் நிலவும் இலங்கை ஆசிரியர் சேவையின் 3ம் வகுப்பு - 1(அ) தரப் பதவி வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை– 2015_(2)**

வடக்கு மாகாண பாடசாலைகளில் நிலவும் இலங்கை ஆசிரியர் சேவையின் 3ம் வகுப்பு - 1(அ) தரப் பதவிக்கு அட்டவணை-I இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உரிய வெற்றிடங்களுக்கு தமிழ் மற்றும் சிங்கள மொழி மூல பட்டதாரிகளை சேர்த்துக் கொள்வதற்காக தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பதவிகளுக்கான பரீட்சையானது 2015 நவம்பர் மாதம் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் அவர்களால் நடாத்தப்படும். அட்டவணை-II இல் காட்டப்பட்டவாறு குறித்த பதவிகளுக்கு உரிய தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி **06.11.2015** ஆகும்.

**அட்டவணை - I கல்வி வலய மட்டத்தில் பாடரீதியான மற்றும் மொழிமூலரீதியான வெற்றிட விபரம்**

| வெற்றிடம் உள்ள கல்வி வலயங்கள் | பாடங்கள் | மொழி | | கணிதம் | | விஞ்ஞானம் | | புவியியல் | | தகவல் தொழில்நுட்பம் | | ஆங்கிலம் | | பொருளியல் | | கணக்கியல் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மொழி மூலம் | தமிழ் | சிங்களம் | தமிழ் | சிங்களம் | தமிழ் | சிங்களம் | தமிழ் | சிங்களம் | தமிழ் | சிங்களம் | தமிழ் | சிங்களம் | தமிழ் | சிங்களம் | தமிழ் | சிங்களம் |
| மடு | | ✔ | -- | -- | -- | -- | -- | ✔ | -- | -- | -- | -- | -- | ✔ | -- | ✔ | -- |
| தீவகம் | | ✔ | -- | -- | -- | -- | -- | ✔ | -- | -- | -- | -- | -- | ✔ | -- | -- | -- |
| துணுக்காய் | | ✔ | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- |
| முல்லைத்தீவு | | ✔ | ✔ | -- | ✔ | -- | ✔ | ✔ | -- | -- | ✔ | -- | ✔ | ✔ | -- | ✔ | -- |
| கிளிநொச்சி | | ✔ | -- | -- | -- | -- | -- | ✔ | -- | -- | -- | -- | -- | ✔ | -- | ✔ | -- |
| வவுனியா வடக்கு | | ✔ | -- | -- | -- | -- | -- | ✔ | -- | -- | -- | -- | -- | ✔ | -- | -- | -- |
| வவுனியா தெற்கு | | -- | ✔ | -- | ✔ | -- | ✔ | ✔ | -- | -- | ✔ | -- | ✔ | ✔ | -- | ✔ | -- |

(“✔” என்ற அடையாளம் வெற்றிடங்கள் உண்டு என்பதையும் “--” என்ற அடையாளம் வெற்றிடங்கள் இல்லை என்பதையும் குறிக்கும்)

## 02. ஆட்சேர்ப்புச் செய்வதற்கான சேவை நிபந்தனைகள்

2.1 1885/38 ஆம் இலக்க 2014.10.23ம் திகதிய இலங்கை சனநாயக சோலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக்குறிப்பைத் தழுவியதாக சேவை நிபந்தனைகள் தீர்மானிக்கப்படும். இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும்.

2.2 இது இடமாற்றத்திற்குரிய சேவையாகும். இந்நியமனம் பெறுபவர்கள் வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்றத் தயாராக இருத்தல் வேண்டும்.

2.3 ஒரு சேவை நிலையத்தில் நியமனம் பெறும் ஆசிரியர், அதே சேவைநிலையத்தில் ஆகக் குறைந்தது 06 வருடங்கள் தொடர்ச்சியாக் சேவையாற்ற வேண்டும் என்பது கட்டாயசேவை நிபந்தனையாகும்.

## 03. சம்பள அளவுத்திட்டம்

இப் பதவிக்கு புதிதாக ஆட்சேர்ப்புச் செய்யப்படும் ஆசிரியர் ஒருவர் பொது நிர்வாகச் சுற்றறிக்கை 06/2006(xii)க்கு அமைவாக, ரூபா 13,410-145 X 6- 180 X7-215x2-15,970/= என்னும் மாதாந்த சம்பள அளவுத்திட்டத்தின் GE-1-2006இன் 14வது படிநிலையான ரூபா 15,540/= இல் அமர்த்தப்படுவர்.

## 04. பொதுத் தகைமைகள்

4.1 விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

4.2 விண்ணப்பதாரர் அல்லது பெற்றோர் வடக்கு மாகாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

அல்லது

விண்ணப்பதாரி வடக்கு மாகாணத்தை நிரந்தரவதிவிடமாகக் கொண்டவராக இருத்தல் வேண்டும். அதாவது இவ் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் உள்ள 06 ஆண்டு காலப்பகுதியில் ஆகக் குறைந்தது 03 ஆண்டுகளாயினும் வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக வசித்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு 1** :- தமிழ் மொழிமூல விண்ணப்பதாரிகளின் தெரிவின் போது போட்டிப்பரீட்சைப் புள்ளிகளின் முன்னுரிமை நிலை மற்றும் வெற்றிடங்கள் காணப்படும் பாடசாலை அமைந்துள்ள மாவட்டத்தை வதிவிடத்தகைமையாகக் கொண்டவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு மீதமுள்ள வெற்றிடங்கள் நிரப்பப்படும் பொழுது மாகாண மட்டத்தில் பெறப்பட்ட புள்ளிகளின் முன்னுரிமை நிலை கருத்தில் கொள்ளப்படும்.

**குறிப்பு 2** :- சிங்கள மொழிமூல விண்ணப்பதாரர்களின் தெரிவின் போது போட்டிப்பரீட்சைப் புள்ளிகளின் முன்னுரிமை நிலை மற்றும் வெற்றிடங்கள் காணப்படும் பாடசாலை அமைந்துள்ள மாவட்டத்தை வதிவிடத்தகைமையாகக் கொண்டவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு மீதமுள்ள வெற்றிடங்கள் மாகாண மட்டத்தில் பெறப்பட்ட புள்ளிகளின் முன்னுரிமை நிலை கருத்தில் கொள்ளப்படும். மேலும் வெற்றிடம் எஞ்சியிருப்பின் வடமாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்களிலிருந்து விண்ணப்பித்தோரின் புள்ளிகளின் முன்னுரிமை நிலை கருத்தில் கொள்ளப்படும்.

4.3 ***வயதெல்லை*** :- விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18 வயதிற்கு குறையாதவராகவும், 35 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

4.4 சிறந்த தேகாரோக்கியமும் நன்னடத்தையும் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

## 05. கல்வித்தகைமைகள்

5.1 இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பிற்கமைய விண்ணப்ப முடிவுத் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கல்வி விடயத்திற்குப் பொறுப்பான நிரல் அமைச்சினால் ஆசிரியர் நியமனங்களுக்குரியதாக அங்கீகரிக்கப்பட்ட விசேடமான பாடத்துறைகளுக்குரிய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகத்தினால் அல்லது மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனத்தின் மூலம் வழங்கப்பட்ட பட்டத் தகைமைச் சான்றிதழைக் பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

5.2 க.பொ.த(சா/த) பரீட்சையில் தமிழ்மொழி அல்லது சிங்களமொழி மற்றும் கணிதம் ஆகிய பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**அட்டவணை – II பாட வகுதிகளும் அவற்றிற்கான அடிப்படைக் கல்வித் தகைமைகளும்**

| பாட இலக்கம் | பாட வகுதி | தேவையான கல்வித் தகைமைகள் |
|---|---|---|
| *01* | கணிதம் | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் கணித பாடத்தை பிரதான பாடங்களில் ஒன்றாகக் கொண்ட விஞ்ஞானமாணிப் பட்டம். |
| *02* | விஞ்ஞானம் | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் விஞ்ஞான பாடத்தை பிரதான பாடங்களில் ஒன்றாகக் கொண்ட விஞ்ஞானமாணிப் பட்டம். |
| *03* | தமிழ் | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் தமிழ் பாடத்தை விசேட பாடமாகவோ அல்லது பிரதான பாடங்களில் ஒன்றாகவோ கொண்ட கலைமாணிப் பட்டம் ( விசேட பட்டம் உடையவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்) |
| *04* | தகவல் தொழில் நுட்பம் | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் தகவல் தொழில் நுட்ப பாடத்தை பிரதான பாடமாகக் கொண்ட விஞ்ஞானமாணி / கணணி விஞ்ஞானமாணிப் பட்டம். |
| *05* | ஆங்கிலம் | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் ஆங்கில பாடத்தை பிரதான பாடங்களில் ஒன்றாகக் கொண்ட கலைமாணிப் பட்டம். |
| *06* | சிங்களம் | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சிங்கள பாடத்தை பிரதான பாடங்களில் ஒன்றாகக் கொண்ட கலைமாணிப் பட்டம். |
| *07* | புவியியல் | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் புவியியல் பாடத்தை விசேட பாடமாகவோ அல்லது பிரதான பாடங்களில் ஒன்றாகக் கொண்ட கலைமாணிப் பட்டம். (விசேட பட்டம் உடையவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்) |
| *08* | பொருளியல் | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெற்றுக் கொண்ட வணிகமாணி / முகாமைத்துவமாணிப் பட்டம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பொருளியல் பாடத்தை விசேட பாடமாகவோ அல்லது பிரதான பாடங்களில் ஒன்றாகக் கொண்ட கலைமாணிப் பட்டம். (விசேட பட்டம் உடையவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் |
| *09* | கணக்கியல் | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெற்றுக் கொண்ட வணிகமாணிப் பட்டம் அல்லது முகாமைத்துவமாணிப் பட்டம். |

## 06. ஆட்சேர்ப்பு முறை

எழுத்துப் பரீட்சையில் திறமை அடிப்படையிலும், ஆட்சேர்ப்பு நேரத்தில் வலுவிலுள்ள பொது நிர்வாக சுற்றறிக்கை, ஆட்சேர்ப்புத் திட்டம், தேசிய மற்றும் மாகாண கொள்கைகள் என்பவற்றுக்கு அமைவாகவும், ஆசிரியர் சேவைப் பிரமாணக்குறிப்பிற்கு அமைவாகவும் ஆட்சேர்ப்புச் செய்யப்படும். இவ்வறிவித்தலில் கோரப்பட்ட தகைமைகள் யாவும் நேர்முகப் பரீட்சையில் பரீசிலிக்கப்படும். தேவையான தகைமைகள் இல்லையென தெரிய வந்தால் இவ் ஆசிரியர் சேவைக்கான உரிமைகள் இரத்துச் செய்யப்படும். எழுத்துப் பரீட்சை நடாத்துவது கிடைக்கப் பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கையைப் பொறுத்து தீர்மானிக்கப்படும். நேர்முகப்பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. நியமனத்திற்கான தெரிவின் போது

நிரந்தர வதிவிடம் தொடர்பாக பந்தி 04 இன் மீது கவனம் செலுத்தப்படும். நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கத்தவறும் சான்றுகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட மாட்டாது.

6.1 இவ் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன், கோரப்பட்டுள்ள சகல தகைமைகளையும் பெற்றிருத்தல் வேண்டும். பெறுபேறுகளை எதிர்பார்த்துச் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள், கோரப்பட்ட கல்வித் தகைமையை பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள் ஆகியன நிராகரிக்கப்படும்.

6.2 வெற்றிடத்தின் 03% மாற்றுத்திறனாளிகளுக்காக (வலது குறைந்தோர்) ஒதுக்கப்படும். பரீட்சார்த்தி நியமனத்திற்காக தெரிவுசெய்யப்படும் போது குறித்த பதவியில் கடமையாற்றுவதற்கு தனது மாற்றுத்திறனானது (வலது குறைவானது) தடையாக அமையாது என்பதனை விசேட மருத்துவப் பரிசோதனை மூலம் நிரூபித்தல் வேண்டும்.

6.3 இப் பரீட்சை போட்டிப்பரீட்சையாக இருப்பதனால் நியமனத்திற்கு தகைமை பெறுபவர் ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் ஆகக் குறைந்தது 40% புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

6.4 பட்டதாரிகள் தமது தகைமைகளுக்கு ஏற்ப பொருத்தமான பாடங்களுக்கு மாத்திரம் விண்ணப்பிக்கும் போது அப் பாடங்களை குறிப்பிட்டு ஒரேயொரு விண்ணப்பப்படிவத்தை மாத்திரம் அனுப்பி வைத்தல் வேண்டும். அப்பாடங்களுக்கமைவாகவே நியமனம் வழங்கப்படும். ஆசிரியர் சேவைக்காக விண்ணப்பிக்கும் பாடம் / பாடங்கள் பின்னர் எக்காரணம் கொண்டும் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

## 07. எழுத்துப் பரீட்சை

இப்பரீட்சையானது தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய இரு மொழிமூலங்களிலும் நடாத்தப்படும். விண்ணப்பதாரிகள் தாம் விண்ணப்பிக்கும் மொழியில் பரீட்சைக்குத் தோற்றமுடியும். இவ் எழுத்துப்பரீட்சையானது கீழ்க் குறிப்பிடப்பட்ட இரு வினாப்பத்திரங்களை உள்ளடக்கியதாக இருக்கும்.

| இல | வினாப்பத்திரம் | பாட விதானம் | நேரம் | புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 01 | நுண்ணறிவுப் பரீட்சை | பரீட்சார்த்திகளிடம் ஆசிரியர் தொழிலுக்காக காணப்படும் திறமைகள் தர்க்க ரீதியிலான அறிவு தொடர்பில் மதிப்பீடு செய்யும் நோக்குடன் இவ் வினாத்தாள் தயாரிக்கப்படுகின்றது. இது பல்தேர்வு மற்றும் சுருக்கமாக விடையளிக்கக் கூடிய 50 வினாக்களைக் கொண்டதாகும். சகல வினாக்களுக்கும் சுருக்கமாக விடையளிக்க வேண்டும். | 01 மணித்தியாலம் | 100 |
| 02 | பொது அறிவு | தாம் விண்ணப்பிக்கும் ஆசிரியர் துறைக்குரிய அத்துறை தொடர்பாக காணப்படும் பொது அறிவு / அல்லது உள்ளீட்டு ரீதியில் ஏற்பட்டுள்ள மற்றும் ஏற்படக்கூடிய கல்வி முன்னேற்றங்கள் தொடர்பான பொது அறிவு மற்றும் கல்வி நவீனமயப்படுத்தல் செயற்பாடுகள் தொடர்பான பொது அறிவினைப் பரிசீலனை செய்யக்கூடிய பல்தேர்வு மற்றும் சுருக்கமாக விடையளிக்கக் கூடிய வினாத் தாள்களாகும். சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். | 01 மணித்தியாலம் | 100 |

## *08.* பரீட்சைக் கட்டணம்

விண்ணப்பதாரி வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள பிரதேச செயலகமொன்றில் ரூபா **500/-**ஐ **"வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளர்"** அவர்களின் ***3003*** என்ற வைப்பு கணக்கிற்குச் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் உரிய கூட்டில் கழராதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது என்பதுடன் இக்கட்டணத்தை வேறு ஏதும் பரீட்சைக்கு மாற்றவும் அனுமதி வழங்கப்படமாட்டாது. விண்ணப்பக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**குறிப்பு** *3*:- வடக்கு மாகாணத்திற்கு வெளியில் வதியும் சிங்கள விண்ணப்பதாரிகள் **"செயலாளர், மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு, வடக்குமாகாணம்,"** அவர்களுக்கு யாழ்ப்பாணம் பிரதான தபால் அலுவலகத்தில் மாற்றக் கூடியவாறு ரூபா ***500*** பெறுமதியான காசுக் கட்டளையை பெற்று விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.

## *09.* பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்

பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர்கள் திருப்தியுறும் வகையில் தங்களது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுகின்றனர். ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கு பின்வரும் ஆவணங்களில் யாதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள்அடையாள அட்டை

(ii) செல்லுபடியாகும் ஒரு கடவுச்சீட்டு (Pass Port)

மேற்குறிப்பிடப்பட்ட ஆவணமொன்றை சமர்ப்பிக்கத்தவறும் பரீட்சார்த்தியொருவரின் பரீட்சை எழுதும் உரிமை பரீட்சை மேற்பார்வையாளரது தற்றுணிவின்படி இரத்துச் செய்யப்படலாம்.

## *10.* விண்ணப்பிக்கும் முறை

*10.1* இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைவாக A4 அளவிலான (*21*செ.மீ x *29*செ.மீ) தாளின் இரு பக்கங்களையும் உபயோகித்து தாளின் முதல் பக்கத்தில் *01* தொடக்கம் *12.4* வரையான விடயங்களையும், இரண்டாம் பக்கத்தில் ஏனைய விடயங்களையும் உள்ளடக்கி விண்ணப்பப் படிவம் தயாரிக்கப்படல் வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவத்தை ***06.11.2015*** திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு, "**செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல: *393/48*, கோவில் வீதி, யாழ்ப்பாணம்."** எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். முழுமையாகப் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

*10.2* ஏற்கனவே அரச/மாகாண அரச சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் தங்கள் திணைக்களத் தலைவர் ஊடாக விண்ணப்பித்தால் மட்டுமே அவரது சேவை ஓய்வூதிய நோக்கத்திற்காகக் கருத்திற்கொள்ளப்படும்.

*10.3* அனுப்பிவைக்கும் **கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின்** பெயரைக்குறிப்பிடல் வேண்டும்.

*10.4* ஒன்றுக்கு மேற்பட்ட ஆசிரியர் வெற்றிடங்களுக்கு விண்ணப்பிக்க விரும்பும் தகைமையுடைய விண்ணப்பதாரிகள் விருப்பத் தெரிவினை விண்ணப்பத்தில் சரியாக குறிப்பிடல் வேண்டும். இது பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

*10.5* விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக் கொள்ளல் பயனுள்ளதாகும். விண்ணப்பத்தின் புகைப்படப் பிரதி, முன்னோடிப் பிரதி என்பன ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

*10.6* பரீட்சைக்கான அனுமதி அட்டை மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளர் அவர்களினால் அனுப்பிவைக்கப்படும். பரீட்சைக்கான அனுமதி அட்டை

அனுப்பிவைக்கப்படலானது விண்ணப்பதாரி சகல தகைமைகளையும் கொண்டுள்ளார் எனக்கருதப்படலாகாது.

10.7 விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள தகைமையுள்ள விண்ணப்பதாரிகள் பரீட்சைத் திகதிக்கு குறைந்த பட்சம் 03 நாட்களுக்கு முன்னராவது அனுமதி அட்டை கிடைக்காவிடின், அனுமதி அட்டை கிடைக்காமை பற்றி சகல விபரங்களுடனும் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**11. பொய்யான தகவல்களுக்கான தண்டனை**

விண்ணப்பப்பத்திரங்களைப் பூர்த்தி செய்யும்போது மிகக்கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். பரீட்சார்த்தி சமர்ப்பிக்கின்ற ஏதேனுமொரு தகவல் பொய்யானதெனத் தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் அவர் மாகாண அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

**12. பரீட்சை நிலையம்**

இப் பரீட்சை யாழ்ப்பாணத்திலும் வவுனியாவிலும் நடாத்தப்படும்.

13. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் தொடர்பில் அல்லது தெளிவற்ற விடயங்கள் தொடர்பில் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளர் அவர்களின் தீர்மானமே இறுதியானதாகும்.

14. பரீட்சார்த்திகள் யாவரும் பரீட்சை விதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் அமைய நடந்துகொள்ள வேண்டுமென்ற கட்டுப்பாட்டிற்கு உட்படுவர்.

15. நியமிக்கப்படவுள்ள எண்ணிக்கையும் நியமனம் செயல் வலுப்பெறும் திகதியும் நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும். பதவி வெற்றிடங்களின் ஏதாவது எண்ணிக்கையை அல்லது எல்லாவற்றையும் நிரப்பாமல் விடுவதற்கு நியமன அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

16. இப்பரீட்சையை நடாத்துதல் அல்லது இரத்துச் செய்தல் தொடர்பான அதிகாரம் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கே உண்டு.

17. தமிழ்மொழி, சிங்களமொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படின் தமிழ் மொழி உரையே மேலோங்கும்.

18. இவ்விளம்பரத்தை வடக்கு மாகாணசபையின் www.np.gov.lk என்ற இணையத்தளத்திலும் பார்வையிடலாம்.

**ரூ.வரதலிங்கம்**
**செயலாளர், மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,**
**வடக்கு மாகாணம்.**
***07.10.2015***